Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★


# ஈழநாடு

THE EELANADU

Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 117

யாழ்ப்பாணம் வைகாசி 26 ரபிஆகி 15 புதன்கிழமை (9-6-71)



நவநாகரிக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

ஹீரன் ஜுவல்லர்ஸ்

போன் 444 தந்தி: இரத்தினம்ஸ்

50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

10 JUN 1971 ... COLLEGE ... LIBRARY


# புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முன்வாருங்கள்!

## மாணவருக்கு பொலிஸ் அதிபரின் அறிவுரை

## இன்று மீண்டும் பாடசாலைகள் ஆரம்பம்

(எஸ். கே. காசிலிங்கம்)

யாழ்ப்பாணம், புதன்

நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பின்னர் இன்று மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகும் தினத்தில் வடபகுதி மாணவர்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கு கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குவிதிகள்பற்றி வடபகுதிபொலிஸ் அதிபர் விடுத்த அறிவுறுத்தல்களை இங்கு தருகிறோம்.

* பாடசாலை முடிவடைந்த பின்னர் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நிற்கும் மாணவர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்படுவர்.
* மாணவர்கள் எந்தவொரு கூட்டங்களையும் பாடசாலைகளில் நடத்தக் கூடாது.
* பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களோ மாணவர்களோ அல்லது பழைய மாணவர்களோ அரசியல் விஷயங்கள் அல்லது அரசாங்கம் சம்பந்தப்பட்டவற்றைப் பேசக்கூடாது.

வடபகுதி பொலிசார்சகல பாடசாலை அதிபர்கள்மூலம் மாணவர்களுக்கு இந்த அறிவித்தல்களை விடுத்துள்ளனர்

வட மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் தத்தமது பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு சென்று பாடசாலை அதிபர்களைச் சந்தித்து மேற்கூறப்பட்டவற்றை அமுல்நடத்துவதற்குபொலிசாருடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்வார்கள்

வடபகுதிபொலிஸ்அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம்சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத்தில், தத்தமது பகுதிகளிலுள்ள பாடசாலை அதிபர்களைநேரில் சந்தித்த வடபகுதியில் ஒழுங்கையும் அமைதியையும் தொடர்ந்து நிலைநாட்ட ஆசிரியர்களின் உதவியை நாடுமாறு அறிவித்துள்ளார்

"நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலல்லாது மெச்சத்தக்க அளவில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இலக்காகாமல் அமைதியாக இருந்து வரும் வடமாகாணத்தில் தொடர்ந்தும் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் இடம்பெறாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமுமே உண்டு" என்று பொலிஸ் அதிபர் "ஈழநாடு" மூலம் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமைதியான ஒழுங்கான நற்பண்பாடுடைய ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் ஆக்கபூர்வமான பணிக்கு ஆசிரியர், மாணவர் மட்டுமன்றி பெற்றோரும் தமது பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்று பொலிஸ் அதிபர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

பாடசாலைகளில் மாணவர் மத்தியில் ஒழுங்கை மிகவும் கண்டிப்புடன் அமுல்நடத்துமாறும், பாடசாலை நேரத்தில் பழைய மாணவர்களையும், வெளியாரையும் மாணவர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கவேண்டாம் என்றும் பொலிசார் பாடசாலை அதிபர்களிடம் கேட்டுக் கொள்வார்கள்.

பாடசாலைகளில் சமூகக் கூட்டங்கள், மாணவர் மன்றக் கூட்டங்கள், அரசாங்கத்திற்கு எதிரான கூட்டங்களை நடத்தும் மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படுவார்கள் என்று பொலிஸ் அதிபர் தெரிவித்தார். பாடசாலை முடிந்ததும் மாணவர்களை நேரடியாக வீட்டுக்குச் செல்லுமாறும், வீதிகளில் காணப்படும் மாணவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

(6ம் பக்கம் பார்க்க)


## திருமண அழைப்பு

மணமகன்: செல்லையா மகேஸ்வரன்
(உரிமையாளர் ஜாப்னு எலெக்ரிக்கல்ஸ்)

மணமகள்: கணபதிப்பிள்ளை சரஸ்வதி
[லிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் க. தர்மலிங்கம் சகோதரி]

காலம்: 29-ந் திகதி (12-6-71) சனிக்கிழமை
மு. ப. 10-45க்கும் 11-45க்கும் இடையில்

இடம்: மணமகள் இல்லம் (ஆவரங்கால்)

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனித்தனி அழைப்பிதழ் அனுப்பியமைக்கு மன்னிக்கவும்)

செ. நடராசாவும் பாரியாரும்,
[மணமகன் சகோதரர்]
சரசாலை வடக்கு.

க. கணபதிப்பிள்ளையும் பாரியாரும்,
ஆவரங்கால் புத்தூர்.

2834


## யாழ்ப்பாணத்திலிருந்து 8 மணிவரை பஸ் சேவை

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 8 மணி வரை மட்டுமே பஸ்சேவை நடைபெறுமென்று நேற்று யாழ். இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டம் இரவு 10 மணி வரை தளர்த்தப்பட்டுள்ள நாளிலிருந்து இரவு 8 மணி மட்டும் பஸ் சேவை நடைபெறுவதாக அவர் மேலும் கூறினார். 8 மணி வரை யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் பஸ்கள் சேவையில் ஈடுபடும்.

தினமும் அதிகாலை 4-30 மணிமுதல் யாழ்ப்பாணத்திலிருந்து சகல பாகங்களுக்கும் பஸ்கள் சேவையிலீடுபடுகின்றன.

## பல தலைவர்கள் சரண் வங்கிக் காசாளரும் ஒருவர்

கோட்டை, செவ்வாய் சரணகதி அடைவதற்கு இறுதியாக வழங்கப்பட்ட சலுகையைஏற்றுக்கொண்டு முதல்நாளாகிய நேற்று மட்டும் பல தலைவர்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர்

மொனறாகலை மாவட்டத்தில் எக்கல் பிட்டிய வங்கியில்60,000ரூபா களவாடப்பட்டது சம்பந்தமாகதேடப்பட்டுவந்த வங்கிக் காசாளர் டி என் அப்புகாமிஇரத்தினபுரி கச்சேரியில் சரணடைந்துள்ளார்

அநுராதபுர மாவட்ட பயங்கரவாதிகள் தலைவர் ரம்பண்டா என்பவர்பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார் இவர் கைது செய்யப்பட்டதினால் இனிமேல் அநுராதபுரத்தில்தாக்குதல் சம்பவங்கள்குறையும்என்று இராணுவ அதிகாரிகள்கருதுகின்றனர்

பாகிஸ்தானில்

## 500 ரூபா, 100 ரூபா நோட்டுகள் செல்லாது

கராச்சி, ஜூன் 8 பாகிஸ்தான் அரசாங்கம் தற்போது புழக்கத்திலுள்ள 500ரூபா, 100ரூபா நோட்டுகள் செல்லாதென்று அறிவித்துள்ளது.

அண்மையில் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள வங்கி ஒன்றில் 60 கோடி ரூபா களவுபோனதைத் தொடர்ந்து அதிபர் யாஹ்யாகான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்

500 ரூபா, 100 ரூபா நோட்டுக்களை மாற்றுவதற்கு 3 நாள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒப்படைக்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சகம்

நல்ல நிலைமையில் அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: லங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. 3166

சுயமாக இயங்கும் சிங்கர் மெஷின்-319K மோட்டோர் மற்றும் உபகரணங்களுடன் சிறிதுகாலம் உபயோகித்த கபினட் மொடல் ரூபா 3,500/-, குருண்டிக் ஸ்ரீறியோ மொடல் M3295 மேசைமொடல் றேடியோகிராம் F.M.L.W SW1,SW2 MW பாண்டுகளுடன் ரூபா 2,500/-, குருண்டிக் டீ. கே. ரேப் றெக்கோடர் ரூபா 1,750/-, ரோக்கே ஸ்ரீறியோ அம்பிளிபயர் புதியது ரூபா 1,200/-, பிளக்ஸ்சா நெஜ் ஜவர கமரா ரூபா 600/-, சன்பக் 7D எலக்ரோனிக் பிளாஷ் புதியது ரூபா 350/-, கபின் ஸ்லேட் புரொஜெக்ரர் ரூபா 350/-, மின்சார உயர் பிரெஷர் ஸ்பிறேகன் ஸ்பிறிக்ஸ் 120 புதியது ரூபா 500/-, பேஜோ 203 இராலி பாவனையிலிருந்தது ரூபா 300/-, எலக்ரோலக்ஸ் மண்ணெண்ணை குளிர்சாதனப்பெட்டி 4.5 கன அடி ரூபா 500/-, ஜெரன்சோன் வொராபிளெம் லேட்டர் புதியது ரூபா 125/-, பார்வையிடலாம்: U. M. டொனறகம, சம்பியன் வீதி கொக்குவில் 3168

### விற்பனைக்கு

காணி:

100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தீவுப்பகுதியைச் சேர்ந்த அல்லைப்பிட்டியில் வெள்ளைக் கடற்கரைக்கு 1 1/2 மைல் கிழக்கே. விபரங்கட்கு: P. S. அருமைநாயகம், ஆசிரியர், அல்லைப்பிட்டி. 3156

2 சோடி, 4 துண்டுகள் கொண்ட தரம் அடித்த 10 அடி நீளமான மரப் பட்டைகள், 4 மரக்கம்பங்களுடன் விற்பனைக்குண்டு. மா. கனகசபை, வடக்கு வீதி, நல்லூர். 3167

கில்லுப்பூட்டிய 600X16 நான்கு சில்லுடன் கூடிய சக்கரத்திருப்பதுடைய 10'X5 1/2' ட்ரெயிலர் விற்பனைக்குண்டு. 5, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். 2492

### தேவை

காணி:

வெளியூரில் கடமையாற்றும் நயினாதீவு வாசிக்கு நயினை வடக்குப் பக்கத்தில் 2 பரப்புக்குக் குறையாமலும் 6 அல்லது 10 பரப்புக்கு மேற்படாமலும் காணி தேவை. விலை, காணியின் முழுவிபரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 3162 C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3162

## 'தையல்வகுப்பை நீடிக்கவும்'

தாவடி, செவ்.

அரசினரால் தாவடி கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடத்தப்பட்டுவரும் தையல் வகுப்பை மேலும் ஒரு வருடம் நீடிக்க வேண்டுமென்றும், தாவடியில் தையல்கண் காட்சியொன்றையும் அடுத்தமாதம் நடாத்துதல் வேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள், தாவடி கிராம முன்னேற்றச் சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

வழக்கறிஞர் திரு மு மதியாபரணம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றபோது வரியிறுப்பாளர் சங்கமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

## புனர் வாழ்வுக்கு தொழிற்கூடங்கள்

கோட்டை செவ்வாய்

பயங்கரவாத நடவடிக்கை தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் நன்மைக்காக தொழிற்கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. புனர் நிர்மாண, புனர்வாழ்வுக்கான செயற்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## 'கல்விக் கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டும்'

### சிங்கப்பூர் மாநாட்டில் முடிவு

சிங்கப்பூர், ஜூன் 8

ஆசியப் பிரதேச நாடுகளில் அமுலில் இருந்துவந்துள்ள கல்விக் கொள்கைகள் முற்றிலும் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய கல்வி அமைச்சர்கள் மகாநாடு கருத்து தெரிவித்திருக்கின்றது. இந்த மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியும் கலந்துகொண்டார்.

கல்வி அபிவிருத்திக்கான சர்வதேசக் கல்விஸ்தாபனம் அளிக்கும் உதவிகள் தெரிந்தெடுத்த நல்ல அம்சங்களுக்குப் பயன்படுத்தவேண்டும் என்றும் மகாநாடு முடிவுசெய்தது.

கல்விக் கொள்கைகள் தற்போதய நிலைமைகளுக்கு ஏற்ப முறைப்படுத்தவேண்டும் என்றும் இம்மாநாடு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## முதல் நன்மை

யாழ்ப்பாணம் செவ்வாய்

கொஞ்சேஞ்சி மாதா கோவிலில் சிறுவர்க்கு 'முதல் நன்மை' கொடுக்கப்பட்டது. யாழ். ஆயர் வண. எல் ஆர் அன்ரி பாடற்பூசை ஒப்புக் கொடுத்து இச்சடங்கை நிறைவேற்றிவைத்தார்.

## எல்லாப் போட்டியிலும் ஸ்பேஸ் வெற்றி

பருத்தித்துறை செவ்வாய்

கரவெட்டி ஸ்பேஸ் கோஷ்டிக்கும் கரவெட்டி கொலம்பியா கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் ஸ்பேஸ் 2 - 1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு என் சின்னத்தம்பி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

வதிரி அம்பாள் கோஷ்டியுடன் நடந்த கரபந்தாட்டப்போட்டியில் ஸ்பேஸ் 2-0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு கே சிதம்பரப்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

நெல்லியடியுடன் நடந்த கரபந்தாட்டப் போட்டியில் ஸ்பேஸ் கோஷ்டி 2 - 0 ஆட்டங்களால் வென்றது. திரு என் இராதாகிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார். கரவெட்டி உஷா கோஷ்டி வதிரி அம்பாள் கோஷ்டியை 2 - 1 ஆட்டங்களால் வென்றது. திரு கே நடராசா மத்தியஸ்தம் வகித்தார்.

### உடுவில் தொகுதி

## பஸ் பிரயாணிகள் சங்கம்

உரும்பராய் செவ்வாய்

உடுவில் தொகுதி பஸ் பிரயாணிகள் சங்கக்கூட்டம் திரு செ இலகுநாதன் தலைமையில் நடைபெற்றது. இப்பகுதி மக்கள் பஸ்ஸுக்காக மணிக்கணக்கில் காத்துக் கொண்டிருப்பதால் யாழ்ப்பாணம் - இணுவில் வரை ஒரு குறுகிய பஸ் சேவையை ஒழுங்குசெய்து தருமாறு கோரும் மகஜர் ஒன்று யாழ் இ போ ச அதிகாரிக்கு அனுப்புவது என்று கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. பின்வருவோர் சங்க நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு செ இரகுநாதன், உபதலைவர்: திரு கே கணேசலிங்கம், செயலாளர்: திரு என் மணிராசா. உபசெயலாளர்: திரு ஆர் சுவாம்பிள்ளை. தனாதிகாரி: திரு து ஞானசபேசன்.

ஏழு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## தேர் தீ வைப்பு வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், செவ்.

மாவைக் கந்தன் ஆலய தேர் தீவைப்பு வழக்கு ஜூலை மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குச் சொந்தமான இரு தேர்களை தீயிட்டு 20 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்படுத்தியதாகவும் செ. சண்முகவடிவேல், எஸ். பொன்னுச்சாமி ஐயர் ஆகியோருக்கு காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம் சாட்டி எஸ். ரி. என் நாகரத்தினம் எஸ். மகேஸ்வரன் எஸ். இராசையா ஆகியோர் மீது இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நேற்று மல்லாகம் நீதிபதி திரு எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் நீதிபதி வழக்கை அடுத்தமாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மகாவலித்திட்ட முதல் கட்டம்

கோட்டை, செவ்.

மகாவலி திசை திருப்பும் திட்டத்தின் முதற் கட்ட வேலைகளில் பெரும்பாலான அம்சங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொல்கொலையிலிருந்து ஆரம்பமாகும் சுரங்கப்பாதையின் 3000 அடி தூரம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது இதற்கு 48 லட்சம் ரூபாய் வரை செலவாகியுள்ளது.

மகாவலியில் 480 அடி அணைகட்டும் வேலையும் பெரும்பாலும் பூர்த்தியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## தமிழகத்தில் ஈழத்து வித்துவான்

மாவிட்டபுரம், செவ்வாய்

ஈழத்தின் பிரபல தவில் வித்துவான்களில் ஒருவராகிய வண்ணை சின்னப்பழனி வேற்பிள்ளை தமிழகத்தில் நிகழும் பல நிகழ்ச்சிகளில் தவில் வாசிப்பதற்காக சென்று அங்கு பல கச்சேரிகளில் கலந்து கொண்டுள்ளார்.

'தில்லானாமோகனாம்பாள்' புகழ் சேதுராமன் பொன்னுச்சாமி குழுவினருடனும் தருமபுரம் நாகசுரவித்துவான் கோவிந்தராஜா குழுவினருடனும் இவர் இணைந்து தவில் வாசித்து ஈழத்தில் புகழை நிலை நாட்டியுள்ளார்.

மதுரையிலும் அதையடுத்த பகுதிகளிலும் இவர் பிரபலமான கச்சேரிகளில் கலந்து கொண்டுள்ளார்.

இவருடன் இணைந்து திருக்கோகர்ணம் செல்லையா, திருவாலப்புத்தூர் கலியமூர்த்தி அதிதுவாரம் பழனிவேல் ஆகியோர் தவில் வாசித்துள்ளனர்.

## இடமாற்றம்

தாவடி, செவ்வாய்

செம்பியன்பற்றுப் பகுதியில் நெசவாசிரியராகக் கடமையாற்றிய திரு சச்சிதானந்தமூர்த்தி என்பவர் இம் மாதம் முதல் கரவெட்டிப் பகுதிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## சிரமதானம்

உடும்பராய், செவ்

காரைக்காடு சிவன் கோவில் வீதிகளையும் அதன் சுற்றுப்புறங்களையும் இணுவில் — கோண்டாவில் இந்துவாலிபர் சங்கம் சிரமதான முறையில் சீர்திருத்தி வருகிறது.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00 5-00
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

ராஜா — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30 பி. ப 2-00 மாலை 5-30 மணி
எம்.ஜி.ஆர். — பானுமதி நடித்த
மலைக்கள்ளன்
(புதிய கொப்பி)

வின்ஸர் — யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-00 மாலை 5-00
சிவாஜி கணேசன் பத்மினி நடித்த
குருதட்சணை

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி.ப. 2-00 மணி
★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த
கன்னிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப. 2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

லிங்ஸ்லி
காலை 10, பி.ப. 2-00 மணி
பாலும் பழமும்

ஹைலன்
காலை 10, பி.ப. 2-00 மணி
சக்கரம்

பிளாஸா
காலை 10, பி.ப. 2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி
பி. ப. 2-00, 6-00
ஜெமினி — விஜயகுமாரி நடித்த
பொற்சிலை
தினசரி பி ப 4-30
Rod Tayler
in
THE BIRDS
(Color film)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
பி.ப 2-30, பி.ப 5-30
உதயகுமார் - சரோஜாதேவி நடித்த
யானைப்பாகன்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30 6-00
ரங்காராவ் - அஞ்சலிதேவி நடித்த
பக்த பிரகலதா

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 4-45 p.m. Only
Guiliano Gemma
Montegomery Wood
in
FORT YUMA GOLD
(Scope- color)
காலை 10-30 பி.ப. 2-00
காந்தாராவ் - ராஜசுலோசனா நடித்த
பாட்டி சொன்ன கதை

ரீகல் — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30
ஜெய்சங்கர் — ஜெயலலிதா நடித்த
யார் நீ?
Daily 6-30 p. m
Ranquel Welch
in
BED AZZLED
(Color-Paramount)

## வங்க தேச அகதிகள்

# கொள்ளை நோய்களுக்கு 3 ஆயிரம் பேர் பலி

## சர்வதேச உதவிகளை விரைவுபடுத்த கோரிக்கை

## இந்திய நிலைபற்றி விளக்குவதற்கு இருமந்திரிகள் வெளிநாடுபயணம்

புதுடில்லி, ஜூன். 8

**இந்தியாவில் வந்து குவிந்துள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளில் சுமார் 3 ஆயிரம் பேர் காலரா போன்ற கொள்ளை நோய்களுக்குப் பலியாகியுள்ளார்கள்.**

**இந்த அகதிகள் மத்தியில் கொள்ளை நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கவும், நோயுற்ற அகதிகளுக்கு உதவவும் சர்வதேச ஸ்தாபனங்கள் பல உதவிகளை அவசரமாக அனுப்பத் தொடங்கியுள்ளன.**

**பிரிட்டனிலிருந்து நடமாடும் ஆஸ்பத்திரி ஒன்று உட்பட பல அவசர உதவிகள் விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பப் பட்டுள்ளன.**

பாகிஸ்தான் அரசாங்கம் தனது 500 ரூபாய், 100ரூபாய் நோட்டுக்களை செலாவணி புழக்கத்திலிருந்து திரும்பப் பெற்றிருக்கிறது.

கிழக்கும் பாகிஸ்தான் நிலைமையையும், இந்தியாவுக்குள் வந்திருக்கும் வங்கதேச அகதிகளின் கஷ்டங்களையும் உலக நாடுகளுக்கு எடுத்து விளக்குவதற்கான முயற்சியாக இந்திய மந்திரிகள் இருவர் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு வங்காளத்திலிருந்து இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ள அகதிகளின் பிரச்னை இந்திய அரசுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

மேற்கு வங்காளத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் காலரா தொற்று நோயின் கொடுமை பெருகிவிருப்பதாகவும் இப்பகுதியில் சுமார் 3 ஆயிரம் பேர் வரை பலியாகியுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் பெரும் பாடுபட்டு வருகின்றது. அகதிமுகாம்களுக்கு நிவாரண உதவிகளும் மருத்துவ வசதிகளும் அவசரமாக அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. ஏராளமான அகதிகள் கொள்ளை நோய்களின் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த அகதிகள் இந்தியப் பொதுமக்களுடன் கலந்துவிட்டால் ஏற்படக் கூடிய பிரச்னை பற்றியும் இந்திய அரசு பெரிதும் கவலை கொண்டிருக்கிறது.

தினமும் 50 ஆயிரம்பேர் வரை இந்தியாவுக்குள் அகதிகளாக நுழைந்து வருகிறார்களாம். இந்த நிலைமைநீடித்தால் இன்னும் இரண்டொரு வாரங்களில் அகதிகளின் தொகை 55 லட்சத்துக்கு மேலாகி விடும் என்று இந்திய அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

### உலக ஸ்தாபனம் உதவி

வங்கதேச அகதிகளுக்கு சர்வதேச மருத்துவ உதவிகள் அவசரமாக விமானம் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்று சர்வதேச சுகாதார ஸ்தாபனம் கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளையும் அந்த ஸ்தாபனம் எடுத்து வருகின்றது. மேற்கு வங்கத்தில் மட்டும் ஏழு மாவட்டங்களில் காலரா கொடுமை தலைவிரித்தாடுகின்றதாம்.

பிரிட்டனிலிருந்து மருத்துவ உதவிகள் விமானம் மூலம் ஏற்கனவே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதில் நடமாடும்ஆஸ்பத்திரி ஒன்றும் இருக்கின்றது.

ஆஸ்திரேலியா இந்தியாவிலுள்ள வங்க அகதிகளுக்காக மருத்துவ உதவிகளை இந்தியாவுக்கு அனுப்பிவைக்கத் தீர்மானித்துள்ளது.

மேற்கு ஜெர்மன் செஞ்சிலுவைச் சங்கம் சுமார் 6 லட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உதவிகளை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப் போவதாக அறிவித்துள்ளது.

பிரஞ்சு அரசாங்கம் இந்தியாவிலுள்ள வங்க அகதிகளுக்கென 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்க முடிவு செய்திருக்கின்றது. இந்த உதவிகள் ஐ. நா. ஹைகமிஷனர் மூலம் இந்தியாவிலுள்ள அகதிகளுக்கு வழங்கப்படும்.

பிரிட்டனிலிருந்து இன்னும் சில தினங்களில் மேலும் 4 விமானங்களில் மருத்துவ உதவிகள் இந்தியாவுக்கு வந்துசேரவிருக்கின்றன.

### அரசியல் தீர்வு தேவை

பாகிஸ்தான் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதையே பிரிட்டன் விரும்புவதாக பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் சேர் அலெக் டக்ளஸ் ஹியூம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுக்கான எந்த உதவியும் ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையிலேயே நடைபெறவேண்டும்.

மேலும்உதவிகள்தேவைப் படினும் கொடுத்துதவ பிரிட்டன் தயாராய் இருக்கின்றது என்று சேர்ஹியூம் கூறினார்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியின்போது அவர் இக் கருத்தைத் தெரிவித்தார்.

### வெளிநாட்டில் இந்திய மந்திரிகள்

வங்காள தேச அகதிகள் நிலைமை பற்றியும் கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை குறித்தும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு விளக்கவும் இந்தியா கடைப்பிடிக்கும் கொள்கைக்கு ஆதரவு தேடவும் என்று இரு அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள். இந்திய நிலைமைபற்றி வெளிநாட்டுத் தலைவர்களுக்கு விளக்குவதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இந்த இரண்டு அமைச்சர்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இந்தியவெளிநாட்டமைச்சர் திரு சுவரன்சிங் இப்பொழுது மாஸ்கோவிலிருக்கின்றார். சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு குரோமிக்கோவுடன் திருசுவரன்சிங் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார் இவர் பின்னர் மேற்கு நாடுகளுக்கும்பயணமாவார் என்று தெரிகின்றது.

இந்திய கல்வி அமைச்சர் திரு. சித்தார்த்தசங்கர்ராய் ஜப்பான்போய் சேர்ந்திருக்கிறார். இன்று அவர் ஜப்பானிய பிரதமர் திரு. சாட்டோவை சந்தித்துப்பேசவிருக்கிறார். திரு ராய் ஜப்பானிலிருந்து பிலிப்பைன்ஸ் தாய்லாந்து மலேஷியா போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்யவிருக்கின்றார். புதன்கிழமையன்று திரு ராய் ஆஸ்திரேலியாவுக்குப் போகவிருக்கின்றார்.

வங்கதேச அகதிகளுக்கு உதவிகள் வழங்குவதுபற்றி ஜப்பானிய அரசாங்கம் இன்று முடிவுசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### பாஷானி முழக்கம்

கிழக்கு வங்காளப் பிரச்னை குறித்து மேற்கு பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதென்பதற்கே இடமில்லையென்று தேசிய அவாமிக் கட்சியின் தலைவர் மௌலானா பாஷானி அறிவித்திருக்கிறார் வங்கதேச சுதந்திர வானொலியில் அவர் உரைநிகழ்த்தினார்

போராட்டங்கள் அதன் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. இறுதி வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது என்று அவர் தெரிவித்தார். மேற்கு வங்காள இராணுவ ஆட்சியாளர் செய்யும் பிழைகளுக்கு இந்தியாவை குற்றம் சாட்டுவதில் நியாயமில்லை! வங்க தேசமக்கள் தமது விடுதலைப் போராட்டத்தில் உறுதியுடன் இருக்கிறார்கள் என்று மௌலானாபாஷானி தெரிவித்தார்.

வெளிநாடுகள் உதவிகள் புரிய முன்வராவிட்டால் நாங்கள் தனித்திருந்தே போராடி வெற்றி பெறுவோம் என்று அவர் அறைகூவினார். மேற்கு பாகிஸ்தானியர் எங்களைத் தொடர்ந்து அடக்கியாள முடியாது. தங்கள் குற்றங்களை மறைப்பதற்காக யாஹ்யாகான் ஆட்சியாளர்கள் வகுப்புக் கலவரங்களைத் தோற்றுவிக்கப் பார்க்கிறார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

### நோட்டுக்கள் செல்லாது

பாகிஸ்தானில் 500ரூபாய் நோட்டுகளும் 100 ரூபாய் நோட்டுக்களும் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோட்டுக்களில் பெருவாரியானவை விடுதலைக்காகப் போராடும் மக்கள் வசம் சிக்கிவிட்டதால் மேற்குப் பாகிஸ்தான் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. புதிய வங்காளதேச நோட்டுகளும் புழக்கத்துக்கு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றன.

---

# செயற்கை முறையில் சுவாசம் ஈர்ப்புச்சக்தி

## விண்வெளியில் ஆராய்ச்சி

மாஸ்கோ, ஜூன் 8

விண்வெளியில் பயணம் செய்யும் பிரயாணிகளுக்கு இடையில் செயற்கைமுறையில் ஈர்ப்புச்சக்தியைப்பயன்படுத்துவதுபற்றி சோயுஸ்-11 என்ற விண்வெளிக்கலத்தில் பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கும் சோவியத் வீரர்கள் ஆய்வு நடத்தவிருக்கிறார்கள்.

இந்தக்கலத்தில் பிரயாணம் செய்யும் வீரர்கள் ஏற்கனவே பூமியைச்சுற்றிக் கொண்டிருந்த சோயுஸ் ஆளில்லா கலம் ஒன்றுடன் தமது கலத்தைவெற்றிகரமாக இணைத்துக்கொண்டுள்ளார்கள். இது சோவியத் விண்வெளி திட்டத்தில் குறிப்பிடக் கூடிய வெற்றிகளில் ஒன்றாகும் பாரமற்ற தன்மையுடன்மனிதன் குறிப்பிட்ட நாட்களுக்குமேல் விண்வெளியில் சஞ்சரிக்க முடியாதென்பது நிரூபிக்கப் பட்டுவிட்டதால் செயற்கை முறையில் ஈர்ப்புவிசையைப் பயன்படுத்திப் பார்ப்பதற்கு சோவியத் விஞ்ஞானிகள் முயற்சி செய்வதாகத் தெரிகின்றது.

இப்பொழுது பூமியை வலம்வந்து கொண்டிருக்கும் கலத்துடன் இணைந்து கொள்ளும்விதத்தில் மேலும் ஒரு கலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையென்று மேற்கத்திய அவதானிகள் கருதுகிறார்கள்.

---

### எண்ணெய் ஒப்பந்தம்

பாக்தாத், ஜூன் 8

ஈராக் அரசாங்கம் சர்வதேச எண்ணெய் ஏற்றுமதி கம்பனிகளுடன் புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளது. மத்திய தரைக்கடல் துறைமுகங்களில் ஏற்றுமதிசெய்யப் படும், எண்ணெயின் விலைகளை இந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்துவதாகத் தெரிகின்றது.

---

### மீண்டும் ராஜீய உறவு

லேகோஸ் ஜூன் 8

தான்சானியாவும் நைஜீரியாவும் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிவு செய்துள்ளன.

நைஜீரியாவிலிருந்து பியாப்ரா பிரிந்துபோனசமயம் அதனை தான்சானியா அங்கீகரித்ததின் காரணமாக இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் முறிந்து போய் விட்டன. மிக விரைவில் இரு நாடுகளும் தூதுவர்களை மாற்றிக் கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

சுழிபுரம் செவ்வாய்

சுழிபுரம் பறளாய் இலு சுப்பிரமணியசுவாமிகோவில் ஸ்ரீ இராமசபைத் தலைவர் திரு சு. கந்தசுவாமி தலைமையில் சிரமதான மூலம் சுத்தம்செய்யப்பட்டது.

# யாழ். நகரில் நவீன நீச்சல் தடாகம்

## இடம் தெரிவு செய்ய ஒரு குழு; விளையாட்டு அரங்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணத்தில் நவீன நீச்சல் தடாகம் ஒன்றை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவுசெய்வதற்கும் அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கும் நேற்று நடந்த யாழ். விளையாட்டு அரங்குக்குழுக் கூட்டத்தில் ஓர் உபகுழு தெரிவுசெய்யப்பட்டது.

யாழ். நகரமண்டபத்தில் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடந்த கூட்டத்தில் மாநகரசபை உத்தியோகத்தர்களும் விளையாட்டு அரங்கு கமிட்டி உறுப்பினர்களும் இலாகா உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

நீச்சல் தடாக அமைப்புக் குழுவில் கீழ் காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர். திரு. வி. முருகேசம்பிள்ளை, திரு. என். தேவபாலன், திரு எம். திருபாகரன், திரு டி. ஜே. என், செல்லத்துரை.

முன்னைய திட்டப்படி விளையாட்டு அரங்கிற்கு அருகில் உள்ள காங்கேசன்துறை வீதியின் ஒரு பகுதியை மூடி விளையாட்டு அரங்கை விஸ்தரிப்பதென்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய விளையாட்டுக்களப் நிலத்தைஇம் மாதம் 1-ம் தேதி யாழ். மாநகரசபை பொறுப்பேற்றதென்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். விளையாட்டரங்கு வேலைகளை செப்டம்பர் மாதத்திற்கு முன்னர் பூர்த்தி செய்து செப்டம்பர் மாதம் திறப்பு விழா செய்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

விளையாட்டு அரங்கின் அபிவிருத்திகளுக்கான நடவடிக்கைகளை எடுப்பதுபற்றி உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

## “கைத்தொழில் மூலம் பொருளாதாரத்தை வளர்ப்போம்”

அரியாலை, செவ்வாய்
“மாணவர்கள் விளையாட்டுடன் மட்டும் நின்று விடாமல் கைத்தொழில்களிலும் ஈடுபட்டு பொருளாதாரத்தை விருத்தி செய்ய முன்வரவேண்டும்” என்று யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நல்லூர் சனசமூக நிலைய மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட புதியமுறை மென்பந்துச் சுற்றுப்போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய க. பரநிருபசிங்கம் கூறினார்.

போட்டியில் “சச்சவட்டை புளு” விளையாட்டுக்கழகம் சம்பியன் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

## ரிமாண்டில் வேலைக்காரச் சிறுமி

தாவடி, செவ்வாய்
எஜமானியினுடைய தாலிக்கொடியைத் திருடினாராம் வேலைக்காரச்சிறுமி இச் சம்பவம் கொக்குவில் கிழக்கில் நடந்துள்ளது.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சகுந்தலா ராமநாதன் என்பவருடைய 15 தங்கப்பவுண் எடையுள்ள தாலிக்கொடியைக் களவாக எடுத்து அவ்வீட்டுவளவினுள் புதைத்து மறைத்து வைத்திருந்தாராம்.

இவ் வேலைக்காரச் சிறுமியை ஆனைக்கோட்டைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரி. குணரத்தினம் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்.

சிறுமி யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 15-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்
மச்சத்துவீட்டு விருந்தவையில் தூங்கப்போனவர், கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு மீளாத்தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். யாழ்ப்பாணம் நாவலர்வீதியைச் சேர்ந்த மாரிமுத்து செல்லையா என்பவரே இவ்விதம் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இரசநாயகம் விசாரணை நடாத்தியபோது இறந்தவரின் மனைவி சாட்சியமளிக்கையில் இடநெருக்கடி காரணமாக பக்கத்து வீட்டு விருந்தையிலேயே தனது கணவர் நித்திரை செய்வது வழக்கமென்றும், சம்பவதின இரவும் அங்கு படுக்கப்போனார் என்றும், காலையில் மரமொன்றில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இறந்து கிடந்தாரென்றும் கூறினார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## உற்சவம்

தாவடி புதன்
இன்று புதன்கிழமை தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலய அலங்கார உற்சவம் ஆரம்பமாகிறது.

## அம்மன் பொங்கல்

தாவடி செவ்வாய்
கட்டைப்பராய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. பல ஊர்களிலிருந்தும் அடியார்கள் வந்து நேர்த்திக்கடன் முடித்துச் சென்றனர்.

மாணவர்களுக்கு

## விவசாய பயிற்சி வகுப்புகள்

கோட்டை, செவ்வாய்
மாணவர்கள் ஒவ்வொரு வருக்கும் விவசாயபாடத்தில் பயிற்சியளிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த விவசாய பயிற்சியை பாடசாலையிலோ வேறு நிலையத்திலோ அளிக்க கல்வி அமைச்சு வசதிகள் செய்து கொடுக்கும் இந்த வருடம் விவசாயத்திற்கான அடிப்படைப் பயிற்சியை மாலியிலும், குண்டசாலையிலும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் அடுத்த வருடம் அம்பாறை, மீரிகம, பேராதனை ஆகிய இடங்களில் விவசாயப் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும்.

## இவர்கள் மாற்றம்பெற்ற இடங்கள்

உடுப்பிட்டி, செவ்வாய்
கல்வித்துறையின் பின்தங்கிய இனிநொச்சித் தொகுதியில் பணிபுரிய முன்வந்த வடபகுதி ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத் கிளையைச் சேர்ந்த ஏழு ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுள்ள பகுதிகள் விபரம் வருமாறு:

திரு. எஸ் சந்தவனம்- இராமநாதபுரம் மேற்கு அ த க பாடசாலை; திரு- எஸ் கிருஷ்ணபிள்ளை - முரசுமோட்டை அ த க பாடசாலை; திரு மு கந்தப்பு- தருமபுரம் இல. 2 அ த க பாடசாலை; திரு எஸ் தாமோதரம்பிள்ளை - தருமபுரம் இல-1 அ த க பாடசாலை; திரு ஐ தம்பிப்பிள்ளை பளை ரோமன் கத்தோலிக்க த க பாடசாலை; திரு எஸ் சண்முகவடிவேல் - கண்டாவளை அ த க பாடசாலை; திரு இ சின்னையா - பளை ரோமன் கத்தோலிக்க த க பாடசாலை.

## சரவணைசைவ இளைஞர் மன்றம்

ஊர்காவற்றுறை, செவ்.
சரவணை சைவ இளைஞர் மன்றத்தின் மூன்றாவது ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம் தலைவர் திரு. வே. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர், பாதுகாவலர்கள்: வித்துவான் திரு. இ. பொன்னையா, ஆசிரியர் திரு. பி. சுப்பிரமணியம், தலைவர்: திரு. கு. கணேசலிங்கம். உப தலைவர்கள் திரு. வே. குணரத்தினம், மா சிவசுப்பிரமணியம், காரியதரிசி: வை. குருமூர்த்தி, தனாதிகாரிகள்: கே யோகராசா, இ திருபாகரன், நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## பஸ்ஸில் பிரசவம்

பண்டாரவளை, செவ்.
பிரசவ ஆஸ்பத்திரிக்கு போய்க் கொண்டிருந்த பெண்மணி ஒருவர் இ. போ. ச. பஸ்ஸிலேயே குழந்தையொன்றைப் பிரசவித்தார், அதேபஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த தாதி யொருவர் இந்தப்பிரசவத்தின்போது உதவியாகவிருந்தார்.

குழந்தையும் தாயும் சுகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதேச மருத்துவ கல்வி நிலையம்

கண்டி, செவ்
அரசாங்க அங்கீகாரத்துடன் பேராதனையில் பிரதேச மருத்துவகல்விநிலையம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

இந்நிலையத்தை அமைக்க உலக சுகாதார ஸ்தாபனம் நிதியுதவி அளிக்கவுள்ளதாகத் தெரிகிறது.

## நூல் நிலையங்களுக்கு 7 லட்சம் ரூபா

கோட்டை, செவ்வாய்
“பாடசாலைகளில் நூல் நிலையங்கள் இன்றி மாணவர்களை நல்லநிலையில் பயிற்ற முடியாது.”

மேற்கண்டவாறு கல்வி அமைச்சர் திரு பதியுதீன் மஹ்மூத் தேசிய நூல்நிலைய சேவைச் சபைக் கூட்டத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டார். நாடு பூராகவுமுள்ள சகல பாடசாலைகளிலும் நூல்நிலைய வசதிகளைச் செய்யும் பொருட்டு 700,000ரூ. ஒதுக்குவ தென்றும் தெரிவித்தார். பாராளுமன்றக் கல்வி அமைச்சின் காரியதரிசி திரு. பீ. வை. துடாவல கல்வியமைச்சின் பதில்காரியதரிசி திரு வே எச் எம் சமரநாயகா ஆகியோரும் இக்கூட்டத்தின் போது பங்குபற்றினர்.

## 1800 ரூபா நன்கொடை

உடுப்பிட்டி, செவ்வாய்
வராணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலைக்குப் புதிய கட்டிடம் அமைப்பதற்காக அரசாங்கம் 1800 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. வடபகுதிக்கல்வியதிகாரி திரு. சந்திரசேகரம் இப்புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

# பெற்றோர்கள் கடமையில் தவறிவிட்டனர்

— மேற்றிராணியார்

கம்பளை, செவ்வாய்
“பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பயனுள்ள வற்றைப் போதிக்கத் தவறிவிட்டார்கள். இவர்கள் பிள்ளைகளின் ஒழுக்கத்துக்கு குணத்துக்கு முக்கியத்துவம் கொடாது அவர்கள் தங்களுக்கென ஒரு நிலையைத் தேடவே அவர்களை பழக்கிவிட்டார்கள். துணிவு, நேர்மை, உண்மையாகிய வற்றை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவில்லை.

கம்பளை சென்ற் அன்ரூஸ் தேவாலயத்தில் விசேஷ பிரார்த்தனைக்கூட்டத்தில் குருநாகல் முதல் மேற்றிராணியார் வண. லக்தாச டிசெல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நிலையையிட்டு மேற்படி விசேஷ பூசை நடைபெற்றது.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணம் ஒரு சிலரது சுயநலமேயாகும். இவர்கள் பலரது நலனைமறந்து அதிகார ஆசைகொண்டு வன்செயல்களில் இறங்கியுள்ளனர். ஆசிரியர்களும் மதகுருமார்களும் தங்கள் மாணவர்களை விரோதித்துக்கொண்டு அவர்களை அவர்கள் செல்லும் தவறான வழிகளில் இருந்து மீட்காது விட்டுவிட்டனர் இவர்கள்கூடிய கவனமெடுத்து மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

## புதிய நிர்வாகிகள்

அரியாலை, செவ்.
சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கத்தின் ஆண்டுக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றபொழுது புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு எஸ் எம் வாசகர், உபதலைவர்: திரு பி வேலுப்பிள்ளை, பொதுக் காரியதரிசி: திரு ஏ தவராசா, உதவிக் காரியதரிசி: திரு கே சண்முகசுந்தரம், தனாதிகாரி: திரு ஏ மார்க்கண்டு, உபதனாதிகாரி: திரு கே பி அரசு, நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

0 0 0

சுழிபுரம், செவ்வாய்
வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவினரின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: ஆ தியாகராசா பா உ, தலைவர்: எம் நடராசா (காரியாதிகாரி) உபதலைவர்: வி இராசசுந்தரம், காரியதரிசி: இ சுப்பிரமணியம் (விளையாட்டுப் போதனாசிரியர்), உபகாரியதரிசிகள்: என் சோமசுந்தரம், வி இராசேந்திரா, தனாதிகாரி: கே என் நவரத்தினம்.

30 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

0 0 0

உடும்பராய், செவ்
இணுவில் இந்துவிளையாட்டுக்கழக வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. செ. இலகுநாதன் தலைமையில் நிலைய அரங்கில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. செ. இலகுநாதன், உப தலைவர்கள்: திரு ம பரமநாதன், திரு ம மகாலிங்கம், செயலாளர்கள்: திரு செ பாலசுந்தரம், திரு பொ தியாகராசா, தனாதிகாரி: திரு சபா சிவநேசன். 11 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## ‘தவறான மனப்பான்மை’

உடுப்பிட்டி, செவ்
“அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் பாடசாலைகளின் சகலவேலைகளையும் அரசு பொறுப்பேற்குமென்று பொதுமக்கள் அக்கறை காட்டாமல் விட்டனர். இம்மனப்பான்மை பிழையானது. இன்று இலங்கையில் செலவிடப்படும் தொகையில் கல்விக்காக 33 வீதம் ஒதுக்கப்பட்டுவருகின்றது” என்று முன்னாள் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாசாலையின் புதியகட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுவைபத்துப்பேசுகையில் குறிப்பிட்டார். தலைமையாசிரியர் திரு. க. சிற்றம்பலம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

“இப்பாடசாலை சில ஆண்டுகளில் துரித வளர்ச்சியடைந்துள்ளது பாராட்டிற்குரியது. கல்விவளர்ச்சியைச் சொந்த விஷயமாகக் கருதிக் கல்லூரிகளைப்பெற்றோர் முன்னேற்ற வேண்டும். கல்லூரி வளர்ந்தாலே ஊரும் வளரும்” என்று திரு சிவசிதம்பரம் கூறினார்.

பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு வே கந்தப்பு நன்றி தெரிவித்துப் பேசினார்.

## இவன் விளையாட்டு கழகத்திற்கு வெற்றி

சுழிபுரம், செவ்வாய்
வலிகாமம் மேற்கு விளையாட்டுக் கழகங்களின் சங்கங்களின் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வட்டு. சிவன் விளையாட்டுக்கழகத்தினருக்கும் தொல்புரம் சனசமூக கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் வட்டுசிவன் விளையாட்டுக் கோஷ்டியினர் முதல் இரண்டு ஆட்டங்களில் வெற்றியடைந்தனர்.

போட்டி வட்டு இந்துக்கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. திருவாளர்கள் ஜெ. சவரிமுத்து சி. கந்தசாமி ஆகியோர் மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

## செஞ்சிலுவை சங்கத்தின் அன்பளிப்பு

கோட்டை, செவ்வாய்
இலங்கைச்செஞ்சிலுவைச் சங்கம் புனர்வாழ்வுமுகாம் களிலுள்ள இளைஞர்களுக்கு துணிவகைகள், விளையாட்டு உபகரணங்கள் முதலியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேற்படி சங்கத்தலைவர் திரு ஏ டி எச் சமரநாயக்கா தலைமையிலான குழுவொன்று இந்த அன்பளிப்பை நேற்று முன்தினம் அனுராதபுரத்திலுள்ள முகாமிலிருந்து வழங்கியுள்ளது.

## யப்பானுக்கு இலங்கை ஷேட்டுகள்

கோட்டை, செவ்
யப்பான் இலங்கையிலிருந்து 10,000 பற்றிக்ஷேட்டுகளை வாங்கவிருக்கிறது.

இதுபற்றி டோக்கியோவிலுள்ள இலங்கை வர்த்தக கமிஷனர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சு இந்த ஷேட்டுகளை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# ‘கந்தபுராணத்தைப் போற்றுவோம்’

## நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் குமாரசூரியர்

சுழிபுரம், செவ்

“கந்தபுராண யுத்தகாண்ட உரை நூல் எமக்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷமாகும், எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் குமரன் பாதம் வணங்கி கந்தபுராணத்தைப் போற்றுவோம்” என்று கந்தபுராணம்- யுத்தகாண்ட உரை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தபால் அமைச்சர் திரு செ குமாரசூரியர் தமது பேச்சில் கேட்டுக் கொண்டார். நேற்றுப் பருவாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் குமாரசூரியர் நூலாசிரியர் யோகி க. கார்த்திகேசுக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கினர்.

முதலியார் சி. முத்துத்தம்பி விழாவுக்குத் தலைமை. இந்நூல் தலைவர் தமதுரையில் கூறியதாவது:-

“புராணங்கள் மங்கிப் போகாமல் காக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தவராகிய நாம் சமய நெறிகளைக் கடைப்பிடிக்கத் தவறியதாலேயே பெரும் கஷ்டத்துள்ளாகியுள்ளோம். சமயம் வளர வாழ்வு மலரும். ஆலயங்கள் தோறும் புராண படனங்களை நடாத்த நாம் ஆவன செய்யவேண்டும். எரியும் விளக்குக்கு ஓர் தூண்டுகோலாக இந் நூலை வெளியிடும் கொழும்புத்துறை இந்துமாமன்றத்தினரையும் இம்முயற்சியில் அதிகம் பங்கு கொண்ட ஒய்வு பெற்ற அதிபர் திரு. சி, சிவலிங்கத்தின் தொண்டினையும் எம்மால் மறக்க முடியாது”

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை அதிபராயிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற திரு. சி. சிவலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர், பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் வேதபாராயணம் ஓதினர். சங்கீத பூஷணம் … முத்துக்குமாரசாமி திருமுறைஓதினர்.

வித்துவான் க. இ. நடராஜன் தமது பாராட்டுரையில “யோகி க. கார்த்திகேசு புராணபடனங்களுக்குப் பயன் கூறுவது தனித்தன்மைவாய்ந்ததென்றும், கேட்பவர் இன்புறும் வண்ணம் நல்ல கருத்துக்களை அவர் துருவித்துருவி அளித்தருவார் அவரது திறமைக்கு இன்று வெளியிடும் நூல் ஒன்றே சாட்சியாகும்” என்றார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் “நாம் நல்லவற்றைச் செய்ய வேண்டும் நாம் தினமும் செத்துக் கொண்டே இருக்கின்றோம் என்பதைத் தெரியாது தேவையற்ற காரியங்களில்காலத்தைப் போக்குகின்றோம். நாவலர்காலம் முதல் கந்தபுராணம் அழியவிடாது காக்கப்பட்டுயாழ்ப்பாணத்தவரின் சொத்தாகக் கருதப்படுகிறது” எனச் சொன்னார்.

பிரமஸ்ரீ சு சண்முகநாத சர்மா, சுழிபுரம் இ.ச. தலைவர் திரு. சுந்தரசுவாமி கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. பி. கணபதி ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

## ஆலயத்தில் திருட்டு

சிலாபம், செவ்வாய்

முனீஸ்வரம் தேவாலயத்திலிருந்து 1500 ரூபா பெறுமதியான ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பந்தமாக சிலாபம் பொலிசார் விசாரணை நடாத்தி வருகிறார்கள்.

……

## சைக்கிள் திருட்டு

நாவடி, செவ்வாய்

யாழ்ப்பாணம் தபால்நிலையத்தைச் சேர்ந்த உதவித் தபாலதிபரொருவருடைய சைக்கிள் திருடப்பட்டுவிட்டதாம். தபால் நிலையத்தோர் ஊழியர்களினுள் விடப்பட்டிருந்த இச் சைக்கிள் காணாமல் போனது சம்பந்தமாகப் பொலிஸார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# பயங்கரவாதிகளைப்பார்வையிட பெற்றேருக்கு அனுமதி

கோட்டை, செவ்.

நாட்டின் புனர்வாழ்வு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் உள்ள பயங்கரவாதிகளைச் சென்று பார்வையிட அவர்களது பெற்றோர், உறவினர் ஆகியோரை அனுமதிக்க நீதியமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி தகவலை நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. நிஹால் ஜயவிக்கிரமா தெரிவித்துள்ளார்

இவ்வாறு மேற்படி தீர்மானத்தை சிறைச்சாலை அதிகாரிகள் செயற்படுத்தவுள்ளனர். மேற்படி பயங்கரவாதிகளின் பெற்றோர் உறவினர்கள் அவர்களைச் சந்திப்பதற்கான நாள் நேரம் குறித்து சிறைச்சாலை அதிகாரிகள் கடிதமூலம் அறிவிப்பார்கள் என திரு. ஜயவிக்கிரம மேலும் தெரிவித்துள்ளார்

அதேவேளையில் மறியலில் இருக்கும் பயங்கரவாதிகளும் தங்கள் பெற்றோர், பாதுகாவலர், உறவினர் ஆகியோருக்குக் கடிதம் எழுதவும் அனுமதிக்கப்படுவர். இக்கடிதத்தில் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்னசெய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தலாமெனவும் திரு. ஜயவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின்

# தபால் கட்டணங்கள் உலக நாடுகளினதிலும் குறைவு

கோட்டை, செவ்

உள்நாட்டு சாதாரண தபால்கள் தபால் அட்டைகள் ஆகியவற்றின் கட்டணத்தை உயர்த்துவது குறித்து அரசாங்கம் ஆலோசனை நடாத்துகிறது.

நாட்டின் தபால் சேவையை முன்னேற்றுதற்காக தபால் உயர் அதிகாரிகளைக் கொண்டகுழுவொன்று சமீபத்தில் விரிவான ஆய்வுஒன்றை நடாத்தியது. இவ்வாய்வின் பின்னரே மேற்படி தீர்மானம் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ளது.

தபால் தந்திக்தொடர்பமைச்சினால் நியமிக்கப்பட்ட மேற்படிகுழு உலகின் ஏனைய பாகங்களின் தபால் சேவை பற்றியும், கட்டணங்கள் பற்றியும் ஆராய்ந்துள்ளது. அதிலிருந்து இலங்கையிலேயே குறைந்த தபால் கட்டணம் அறவிடப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படிகுழுவின் சிபார்சின் படி உள்நாட்டு சாதாரண தபாலுக்கு 15 சதமும் தபால் அட்டைகளுக்கு 5சதத்துக்குமேலும் அறவிடப்படலாம் சகல கூட்டுத்தாபனங்கள், அரசாங்க இலாகாக்கள், அரசாங்க சபைகள் ஆகியன தபால் கட்டணம், பதிவுக்கட்டணம் முதலியவற்றை விதிக்கும். அரசகருமபணி சேவை முற்ருக ஒழிக்கப்படும்.

இந்த சிபார்சுகள் யாவும் அங்கீகாரம்பெற்றால் அடுத்த நிதியாண்டு முதல் மேற்படி கட்டணங்கள் விதிக்கப்படலாம்.

…

## புதிய ஜே. பி.

மாவிட்டபுரம், செவ்.

யாழ் மாவட்டத்துக்கான சமாதான நீதவானாக திரு. சா. வேதநாயகம் போல் நீதியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஒடுக்கப்பட்ட ஊழியர் சங்கத்தினதும் சிறுபான்மைத் தமிழ் மகாசபையினதும் காரியதரிசியாகவும் தனாதிகாரியாகவும் சிலகாலம் கடமையாற்றி தற்போது உபதலைவராகவும் கடமையாற்றி வருகிறார்.

தெல்லிப்பழை ஐக்கிய வாலிப இயக்கம், திருவள்ளுவர் மகாசபை, மாசியப்பிட்டி ஞானோதய சனசமூகநிலையம் ஆகியவற்றின் முன்னாள் தலைவராகிய இவர் மாசியப்பிட்டி ஐக்கிய பண்டகசாலை செயலாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

……

ஆசிரியருக்குக்கடிதங்கள்

# ஆசிரியசங்கங்களுடன் ஆலோசனை செய்யவேண்டும்

நம் நாட்டில் பயங்கரவாத இயக்கமொன்று இரு மாதங்களுக்கு முன் கட்டவிழ்த்துவிடப்பட்டது அது இப்போது பெருமளவு அடக்கப்பட்டுவிட்டது. அதில் பெருமளவு மாணவர்களும் ஓரளவு ஆசிரியர்களும் பங்குபற்றியுள்ளனரென்பது பரவலான நம்பிக்கை இந்த வன்முறை இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சியைத் தடைசெய்ய நமது கல்வித்திட்டத்தில் பாரதூரமான மாற்றங்களைச் செய்யவேண்டியது அவசியமே. அவ்வகையில் இப்போது உடனடியாகச் செயற்படுத்தப்படவுள்ள ‘புரட்சிகரமாற்றம்’ ஆறு நாள் பாடசாலை முறையும், பாடசாலைநேரத்தை மாற்றியமையுமே எனலாம்.

அந்த மாற்றங்களின் தன்மைதீமைகளை இங்கு ஆராயவில்லை. அந்த மாற்றங்களுக்காகக் கண்டுபிடிக்கக்கூறப்படும் காரணங்களையும் ஆராயவிரும்பவில்லை.

ஆனல் அந்த மாற்றங்களை ஆசிரியர்கள் முழுமனதுடன் செயற்படுத்த வேண்டுமென்பதற்காக 1956-ம் ஆண்டு தொட்டு அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் செய்த நன்மைகள் பற்றி கல்வியமைச்சர் பட்டியல் தயாரிக்கும் போக்கினைத்தான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். கல்வியமைப்பில் செய்யப்படும் எவ்வித மாற்றமும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பின்றி பூரண வெற்றிபெருதென்பது முன்னேற்றமடைந்த நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டுவரும் கொள்கையாகும். அதற்கேற்ப அங்கு எவ்வித மாற்றமும் கொண்டுவருமுன் ஆசிரிய சங்கங்களுடன் கலந்தாலோசித்தே முடிவெடுக்கின்றனர். முன்பு இங்கிலாந்தின் கல்வியமைச்சராகவிருந்த ஜோர்ஜ் ரொம்லின்சன் என்பவர், “தேசிய ஆசிரியசங்கத்தின் அங்கீகாரமின்றி எவ்வித சுற்றறிக்கையையும் யான் அனுப்பத் துணிவதில்லை” என்று கூறுவதின் மூலம் அங்கு ஆசிரிய சங்கங்களுக்கு அளிக்கப்படும் இடத்தைச் சுட்டுகிறார். மருத்துவத்துறை பற்றி மருத்துவர்களிடமும் பொறியியல்துறை பற்றி பொறியியலாளர்களிடமும், சட்டத்துறைபற்றி வழக்கறிஞர்களிடமும் ஆலோசனை கேட்பதுபோல கல்வித்துறைபற்றி அதில் அன்ருட உடனடி அனுபவமுள்ள ஆசிரியர்களிடம் ஆலோசனை கேட்டுச் செயற்படுவதே நாட்டின் முன்னேற்றத்திற்கு உண்மையான ஆக்கம் தருவதாகும். கல்வி பற்றிய உடனடி அனுபவமற்ற அதிகாரிகள் செய்பவை “தணிந்தபின் எண்ணுவம்” என்ற பிழைபாடு மலிந்ததாகும். மேலும் அதிகாரத்திலுள்ளோரால் சமீபத்தில் மேற்கோள்காட்டிப் போற்றப்பட்ட இந்திய கோத்தாரி அறிக்கையில், “கல்வித்துறையில நிர்வாகம் ஆசிரிய தொழிலுக்கும் ஆராய்ச்சிக்கும் உதவும் ஒரு சாதனமேயன்றி அவற்றின் எஜமானரல்ல” எனக் குறிப்பிடப்பட்டிருப்பது சிறந்த விவேகமான கல்வி நிர்வாகத்தைக் கோடிட்டுக் காட்டுவதாகும்.

சு. மகாலிங்கம்

வரணிவற்றுறை.

## முழங்காவிலில் இளைஞர் கூட்டுறவுப் பண்ணை

பூநகரி செவ்வாய்

பூநகரி மன்னார் வீதியிலுள்ள முழங்காவில் என்ற இடத்தில் இருபதைந்து இளைஞர்களுக்கான கூட்டுறவுப்பண்ணை அமைக்கப்பட இருக்கின்றது. இப்பண்ணையில் ஆடு, கோழி வளர்ப்பும் உப உணவு உற்பத்தியும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை கிளிநொச்சி ஆட்சிமன்றஉறுப்பினர் திரு வீ. ஆனந்தசங்கரி காணியமைச்சரிடம் கையளித்தபோது அதற்கான அனுமதியையும் அமைச்சர் அளித்துள்ளார். இவ் இளைஞர் பண்ணைக்கு அரசாங்கத் திடமிருந்து கடன் பெறுவதற்கேற்ற ஒழுங்குகளும் செய்யப்படுமெனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

# தமிழிலேயே போதிக்க வேண்டும்

தற்போது சித்த வைத்திய மாணவர்கள் மற்றும் சித்த வைத்தியர்கள் மத்தியில் சித்தவைத்தியத்துக்கு சமஸ்கிருதம் அவசியமா இல்லையா என்ற பிரச்சினை இருக்கும்போது சித்தாயுர்வேதம் என்று கூறி சிலர் பிரச்சினையை மோசப்படுத்த எத்தனிக்கின்றனர் வைத்தியர் கு செல்வத்துரை ‘ஈழநாடு’ இதழில் இப்பிரச்சினை சம்பந்தமாக எழுதியிருந்த கட்டுரையும் இவ்வகையானதே.

சித்த வைத்தியம் என்று ஒரு வைத்தியமுறை உண்டு என்பதை அவர் ஒத்துக்கொள்கிருரா என்றும் ஆயுள்வேத வைத்தியத்துக்குச் சமஸ்கிருதம் மூலமொழி போல, யூனனி வைத்தியத்துக்கு உருது மூலமொழி போன்று சித்த வைத்தியத்துக்கு மூலமொழி எது என்றும், அரசினர் ஆயுள்வேதக் கல்லூரியில் ஆயுள்வேத மாணவர்களுக்கு மூலமொழியாகிய சமஸ்கிருதமும். யூனனி மாணவர்களுக்கு மூலமொழியாகிய உருதுவும் கட்டாயபாடங்களாகக் கற்பிக்கும் நிலையில்சித்த மாணவர்களுக்கு எதனை மூலமொழியாகக் கற்பிக்கவேண்டும் என்றெல்லாம் கேட்கத்தோன்றுகிறது. அவரது கட்டுரையில் எந்த ஒரு சாஸ்திரத்தின் வளர்ச்சிக்கும் பிறமொழி உதவியும் அவசியமாகும் என்று ஆரம்பித்துள்ளார். இதனை யாரும் மறுக்கவில்லையே.

ஒரு சாஸ்திரத்தை அறிவதற்கோ அல்லது அதை வளர்ப்பதற்கோ அச்சாஸ்திரம் ஆரம்பமான மூலமொழியைச் சரிவர அறிந்தால் அன்றி சாஸ்திரமும் விளங்காது. அதுஒருபோதும் வளரவும்மாட்டாது என்பதை நாம் உணருதல்வேண்டும்.

அரசாங்க ஆயுள் வேதக் கல்லூரியில் வடமொழியை மூலமாகக் கொண்ட புத்தகங்களே படிப்பிப்பது உண்மை. கல்லூரியிலுள்ள விரிவுரையாளர்கள் செய்யும் தவறை நாமும் ஆதரிப்பதா?

சித்தவைத்தியம் கற்பதற்கும் ஆராய்ச்சிசெய்வதற்கும் போதுமான நூல்கள் உயர்தமிழிலே செறிந்து காணப்படுகின்றன. இப்புத்தகங்களைச் சித்த வைத்திய மாணவர்களுக்கு ஏன் படிப்பிப்பதில்லை என்றகேள்விக்கு விடைகாணுதல் நியாயத்தை உணர்வதற்குஉதவும். வைத்தியர் செல்வத்துரையின் கட்டுரை சித்தவைத்தியர்களையும் பொதுமக்களையும் தவருன வழியில் திருப்ப முனைவதாகும்

சித்த வைத்திய மாணவர்களுக்குத் தமிழ் வைத்தியத்தை விளங்குவதற்குத் தேவையான உயர்தரத்தமிழையும் வைத்திய நிகண்டையும் கற்பிக்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.

— கெங்கா

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## 1000 டிக்கட் மெஷின்கள்

கோட்டை, செவ்

இலங்கைப் போக்குவரத்துச்சபை 1000 டிக்கட் மெஷின்களை விரைவில் இறக்குமதி செய்யவிருக்கிறது.

டிக்கட் விநியோகத்தில் ஏற்படும் தாமதத்தையும் மற்றும் சீர்கேடுகளையும் நிவர்த்தி செய்யுமுகமாகவே சபை மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

……

## பதவியுயர்வு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மன்னார் திருக்கோணமலை புத்தளம் பகுதிகளில் கள்ளக்குடியேற்றத் தடுப்பு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் திரு. இராமநாதன் பதவியுயர்வு பெற்றுள்ளார். இனிமேல் அவர் கள்ளக்குடியேற்ற தடுப்பு இடக் வேலைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு மேலதிகாரியாகவும் இராணுவ பொலிஸ்சேவைகளின் இணைப்பு அதிகாரியாகவும் கடமையாற்றுவார்.

# காந்திஜி கண்ட விரும்பிய புதிய சமுதாயம்

கே. வேங்கடாசலபதி

இந்தப் புதிய சமுதாயத்தில் சிறிதும் பொருளற்ற வர்களோ பிச்சைக்காரர்களோ, இலட்சாதிபதிகளான முதலாளிகளோ அல்லது அரைப் பட்டினிகிடக்கும் தொழிலாளிகளோ இருக்க மாட்டார்கள். போதை தரும் மதுவோ மருந்தோ இருக்கா: ஆண்களுக்கு அளிக்கப்படும் மரியாதை பெண்களுக்கும் அளிக்கப்படும்; ஆண்கள் பெண்கள் ஆகிய இருபாலாரின் கற்பும் பரிசுத்தமும் அக்கறையுடன் பாதுகாக்கப்படும் அங்கு தீண்டாமை என்பது இருக்காது: எல்லா மதங்களுக்கும் சமத்துவமான மரியாதை அளிக்கப்படும். மக்கள் எல்லோரும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தாமாகவே முன்வந்து உடல் உழைப்பு அளிப்பார்கள். இப்புதிய சமுதாயம் லட்சக்கணக்கான கிராமச முதாயங்களாலான ஒன்றாக இருக்கும் கிராம சமுதாயத்தை "கிராமசுயராஜ்யம்" என்று அடிகள் பலவிடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். கிராம சுயராஜ்யத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன வென்றால் அது ஒரு பூரண குடியரசாக தன்னுடைய ஜீவாதாரமான தேவைகளுக்காக அண்டை அயலாரை எதிர்பார்க்காத பூரண குடியரசாக இருக்கும் அதே சமயம் எது எதற்குப் பிறரைச் சார்ந்திருப்பது அவசியமோ அவைகளில் பிறரைச் சார்ந்திருக்கும்: ஆகவே ஒவ்வொரு கிராமமும் தனது உணவுக்குத் தேவையான பயிர்களையும் துணிக்குத் தேவையான பருத்தியையும் விளைவிப்பதில் முக்கிய கவனம் செலுத்தும் கால் நடைகளுக்கான மேய்ச்சல்நிலமும், வயதானவர்கள் ஓய்வுபெறுவதற்கும் குழந்தைகள் விளையாடுவதற்குமான இடமும் அக்கிராமத்தில் இருந்துவரும் ஒரு நாடக அரங்கு பள்ளிக்கூடம் பொதுமண்டபம் ஆகியவைகளையும் கிராமம் பராமரித்து வரும். சுத்தமான தண்ணீர் விநியோக நிலையமும் கிராமத்துக்குச் சொந்தமாக இருக்கும். கல்வி கட்டாயமாக இருக்கும்: முடிந்தவரை எல்லா நடவடிக்கைகளுமே கூட்டுறவின் அடிப்படையில் இருக்கும் வயதுவந்த கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சாயத்தினரால் கிராம ஆட்சி நடைபெறும் அந்தக் கிராம எல்லைக்குள் இவர்களுக்குப்போதுமான அதிகாரங்கள் இருக்கும்: இந்தப் புதிய பஞ்சாயத்தே கிராம சட்டசபையாகவும் நீதிமன்றமாகவும் ஆட்சிக்குழுவாகவும்; இருந்துவரும் அங்கு தனிப்பட்டவர் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பரிபூரண ஜனநாயகம் இருக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள புதிய சமுதாயத்தை அமைப்பதற்கான ஒரு திட்டத்தையும் நாட்டு மக்களுக்குக் காந்தி அடிகள் கொடுத்திருந்தார் அது "நிர்மாணத் திட்டம்" என்ற பெயரால் அழைக்கப்பட்டது: இந்தத் திட்டம் கதர் அபிவிருத்தி கைத் தொழில்வளர்ச்சி, மத ஒற்றுமை, மாதர் முன்னேற்றம், ஹரிஜன சேவை, சரிசம உடைமை தாய் மொழி இந்தியப் பொது மொழி மதுவிலக்கு, விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள் பாதுகாப்பு முதலிய பல்வேறு அம்சங்களைக் கொண்டது. இந்த நிர்மாணத்திட்டத்தைநிறைவேற்றிவைப்பதற்குரிய நிர்மாண ஊழியர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் என்ன என்பதைப் பற்றியும் காந்தியடிகள் பல முறை பேசியும் எழுதியும் இருக்கிறார் கிராம ஊழியர்களிடத்தில் அன்பும் உண்மையும் புலனடக்கமும்பொருள் சேர்க்க வேண்டும் என்ற ஆசை இல்லாமையும் உடல் உழைப்பும் பயமின்மையும் சர்வமத சமரசமும் எல்லோரையும்சமமாகப் பாவிக்கும் பரந்த உள்ளமும் இருக்க வேண்டுமென்று விரும்பினார்.

......

## 'கூட்டுறவு ஊழியரின் கடமை'

அரியாலை, செவ்

"கூட்டுறவு ஊழியர்கள் பொதுமக்களுக்கு தொண்டாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி சேவைமனப்பான்மையுடன் கடமையாற்ற வேண்டும். இவ் ஊழியர்களிடம் அரசு நேர்மையான சேவையை எதிர்பார்க்கின்றது. திரு. பாலசுப்பிரமணியம் இந்த வகையில் இப்பகுதி மக்களின் பாராட்டையும் மதிப்பையும் பெற்றுள்ளார்"

இவ்வாறு கோப்பாயில் கூட்டுறவுப்பரிசோதகராக கடமையாற்றி கணக்காய்வாளராக பதவிபெற்றுச் செல்லும் திரு க. சு பாலசுப்பிரமணியத்திற்கு கோப்பாய் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற சேவைநலன் பாராட்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய திரு க இ குமாரசாமி குறிப்பிட்டார்

மற்றும் திரு. வ கந்தப்பிள்ளை, திரு. எஸ். ஆலாலசுந்தரம், திரு அ ஜெயரத்தினம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்

......

## முடிக்குரிய காணிகளில் மூலிகைகள்

கோட்டை, செவ்வாய்

ஆயுள்வேத மருந்து வகை மூலிகைகளை பயன்படுத்தாதிருக்கும் முடிக்குரிய காணிகளில் பயிரிடுவதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சுகாதார அமைச்சு நடாத்திய உள் மகாநாட்டில் திட்டத்தின் முடிவின்படி மொனராகலை மாவட்டத்தில் 800 ஏக்கர் காணியில் ஆயுள்வேத மூலிகைகளை நாட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது, வேறு எவ்வெப்பகுதிகளில் மூலிகைகளைப் பயிரிடலாம் என சுகாதார அமைச்சு ஆயுள்வேத இலாகாவிடம் ஆலோசனையும் கேட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

---

## ஏஜன்ஸி நிறுவன விசாரணைகமிஷன்

கோட்டை, செவ்.

ஏஜன்ஸி நிறுவனங்களின் தொழிற்சங்களை விசாரணை செய்ய கமிஷன் ஒன்று விரைவில் நியமிக்கப்படவிருக்கிறது.

கொழும்பு தெற்கு 2-வது ஆட்சிமன்ற அங்கத்தவரான திரு. வெர்னன் சொய்சா மேற்படி கமிஷனின் தலைவராகலாம் எனக்

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] பிரசுரத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] [illegible] வீதி 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அனுதாபம்

மாவிட்டபுரம், செவ்வாய்

தெல்லிப்பழைக் கிராம சபையின் அங்கத்தவராக இருந்து காலஞ்சென்ற திரு. கதிர்காமத்தம்பியின் மறைவு குறித்து தெல்லிப்பழைக் கிராமசபை அனுதாபம் தெரிவித்துள்ளது.

சபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இவரின் மறைவு குறித்து 5 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்து குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

...—

## கஸட் மூலம் வெளிவரும்

கோட்டை, செவ்வாய்

உடுதுணி வகைகளின் தொழிற்சாலைவிலை, மொத்த விற்பனவு விலை, சில்லறை விலை ஆகியவற்றின் விபரம் கஸட் அறிவிப்பு மூலம் வெளியிடப்படும். என்று 'சலுசலா' அதிபர் திரு டக்ளஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் செயற்கை உடுதுணிமணிகளை சலுசலா குறைந்த விலையில் தொடர்ந்து விநியோகிக்கும் என்று அறியப்படுகிறது.

......

## இடமாற்றம்

மாவிட்டபுரம், செவ்வாய்

மயிலிட்டிக் கிராமசபையில் வரி மராமத்து ஓவசியராக கடமையாற்றிய திரு இ. சிவகுரு தம்பலகாமம் கிராமசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை யொட்டி மயிலிட்டிக் கிராம சபை ஊழியரால் பிரிவுபசாரவிழா ஒன்று நடத்தப்பட்டது.

......

## நியமனம்

இணையாணன், செவ்வாய்

உடுப்பிட்டி இணையாணையைச் சேர்ந்த சைவப்புலவர் திரு. க. தணிகாசலம் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சினுள் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் சுன் லங்கா சலுசலா லிமிட்டெட் சந்தைப்படுத்தற் திணைக்களம் ஆகிய ஸ்தாபனங்களின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நூலாசிரியரும் எழுத்தாளருமான இவர் சமயத் தொண்டு தமிழ்த் தொண்டு முதலியவற்றில் மிகவும் ஈடுபாடுடையவர்.

—

## புனர்வாழ்வுக்கு தொழிற்சாலைகள்

கோட்டை, செவ்வாய்

தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கும் பொருட்டு புனர்வாழ்வு புனர் நிர்மாணக் கமிட்டி தொழிற்சாலைகளை நிறுவத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதற்காக வேண்டிய விவசாய கைத்தொழிற் பொருட்களை பல நிறுவனங்களும் கூட்டுத்தாபனங்களும் வழங்கி உதவியுள்ளன.

......

## 500 ரூபா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் பணத்திற்குப் பதிலாக ரசீது மட்டும் வழங்கப்படும். இதற்குரிய பணம் எப்போது திருப்பிக் கொடுக்கப்படுமென்று அறிவிக்கப்படவில்லை.

---

கூறப்படுகிறது

தோட்டத் தொழில் அமைச்சு இக்கமிஷனை நியமிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

# செவ்வாயை நோக்கி மாஸ் 2, 3 விரைகிறது

மாஸ்கோ, ஜூன் 8

மே மாத நடுப்பகுதியில் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட மாஸ் 2, மாஸ் 3 செவ்வாய்க் கலங்கள் திட்டமிட்டபடி செவ்வாய்க்கிரகத்தை நோக்கிய பாதையில் சென்றுகொண்டிருப்பதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

மே மாதம் 12-ந் திகதி அனுப்பப்பட்ட மாஸ் 2 பூமியிலிருந்து 48 லட்சத்து 97 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவில் சென்று கொண்டிருந்ததாகவும், மே மாதம்28-ந்திகதி அனுப்பப்பட்ட மாஸ் 3 28 லட்சத்து 80 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவில் சென்று கொண்டிருந்ததாகவும் டாஸ் அறிவித்தது.

மாஸ் 3ல் சிறிய திருத்தங்கள் செய்யப்பட்டதாகவும், திட்டமிட்டபடி செவ்வாய்க்கிரகத்தை இரண்டு கலங்களும் சென்றடையும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# வேலைநேர மாற்றம் இன்று அமுலுக்குவருகிறது

கோட்டை, செவ்வாய்

பாடசாலை, தனியார் துறை, அரசாங்க அலுவலக நேர மாற்றம் இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

ஏற்கனவே அறிவித்தது போல நகர்ப்புறங்களிலுள்ள பாடசாலைகள் காலை 7 30 மணிக்கு ஆரம்பமாகி 2-30 மணிக்கு முடிவடையும். அரசாங்க அலுவலக நேரமும் முன்னதாக அறிவித்தபடி அமுல் நடத்தப்படும் மதிய போசன இடைவேளை தவிர்ந்த ஏனைய அலுவலக நேரத்தில் சிற்றுண்டிச்சாலைக்கு அரசாங்க ஊழியர் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற சட்டமும் இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

......

## புதிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதி பாடசாலைகள் காலை 7-30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பமாகி பிற்பகல் 2-30 மணிக்கு மூடப்படவேண்டும் என்ற புதிய திட்டத்தை வட பகுதியில் கட்டாயம் அமுல் நடத்தவேண்டியதில்லை என்றும், இவ்வித செய்ய வசதியில்லாத பாடசாலை அதிபர்கள் முன்னர் நடந்தது போல பாடசாலைகளை நடத்தலாமென்றும் வடமாநிலக் கல்வியதிபதி திரு. மகாதந்தில அறிவித்துள்ளார். ஆயினும் தமது பாடசாலைகள் எவ்விதம் செயல்படுகின்றன என்பது பற்றிக் கல்வியதிபதிக்கு அறிவிக்கப்படவேண்டுமென்றும் திரு. மகாதந்தில தெரிவித்தார்.

......

## ரயில் நேரத்தில் மாற்றம்

கோட்டை, செவ்வாய்

ரயில் சேவை நேரத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை ரயில்நிலையத்திலிருந்து காலை 11-55க்கு காங்கேசன்துறைக்கு ரயில் புறப்பட்டு இரவு 8 மணிக்கு காங்கேசன்துறையைச் சென்றடையும், காங்கேசன்துறையிலிருந்து பகல் 12 மணிக்குப் புறப்படும் ரயில் கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தை இரவு 8 மணிக்குப் போய்ச்சேரும்

இதுபோன்று ஏனைய ரயில் சேவை நேரத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன

---

## 'ஜலகங்கா'

யாழ்ப்பாணம், புதன்

'ஜலகங்கா' எனும் இந்தியக் கப்பல் கியூபாவிலிருந்து சீனி ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இத்துறைமுகத்திலிருந்து இறக்குமதி செய்வதினால்பலருக்குத் தற்காலிக வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது. 5,200 தொன் நிறையுள்ள சீனி இறக்குமதி செய்யப்படவுள்ளது என நம்பப்படுகிறது.

......

## புதிய வைத்தியசாலை இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ் நகரில் புதிதாக தனியார் ஆங்கில வைத்தியசாலையொன்று இன்று ஆரம்பிக்கப்படுகிறது. கஸ்தூரியார் வீதியில்முத்துக்குமாரு வைத்தியசாலைக்குப் பக்கமாக நிறுவப்பெற்றுள்ள இப்புதிய வைத்தியசாலையில் டாக்டர் யோகு பசுபதி, திருமதி டாக்டர் நளாயினி பசுபதி ஆகியோர் பணியாற்றுவார்கள்.

லண்டனில் பயிற்சிபெற்ற டாக்டர் யோகு பசுபதி வைத்திய சுப்பிரிண்டனாயிருந்து ஓய்வுபெற்ற டாக்டர் வி ரி பசுபதியின் புதல்வரும் காலஞ்சென்ற வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாருவின் பேரனும் வைத்தியர் திரு மு கதிரவேற்பிள்ளையின் மருமகனுமாவர். டாக்டர் தம்பதிகள் குழந்தை வைத்தியத்திலும் தேர்ச்சியுடையவர்கள் அத்துடன் திருமதி டாக்டர் நளாயினி பிரசவ வைத்தியத்திலும் தேர்ச்சிபெற்றவர் இவர் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த டாக்டர் க. சிவஞானரத்தினத்தின் புதல்வியும் டாக்டர் கனகரத்தினத்தின் பேத்தியுமாவர்

## தனியார்துறை ஊழியர்பற்றி ஆராய 7 சபைகள்

கோட்டை செவ்வாய்

சுமார் 20,000க்கும் அதிகமான தனியார் துறைஊழியர் நன்மைபெறத்தக்க வகையில் சம்பள உயர்வு மேலதிகநேர ஊதியம்போன்றவற்றைப் பரிசிலனை செய்வதற்கு ஏழு சம்பளச் சபைகளை நிறுவுவது பற்றி ஆரம்ப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக தொழில் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சம்பளசபைகள் நிறுவப்பட்டதும் தனியார்துறை ஊழியர்களுக்கு ஏற்படுத்த வேண்டிய சலுகைகள் பற்றி ஆராயப்படும்.

—

## பருத்தித்துறையில் கியூபா சீனிக் கப்பல்

யாழ்ப்பாணம் புதன்

கியூபாவில் இருந்து சீனியுடன் பருத்தித்துறைக்கு வந்த இந்தியக் கப்பல் ஜலகங்காவிலிருந்து சீனி துரிதமாக இறக்கப்படுகிறது.

5200 தொன் சீனியை இறக்கும் வேலையில் இப்பகுதி இளைஞர்களும் தற்காலிகமாக சடுபடுத்தப்பட்டுள்ளனர் கடந்த 2 வருடங்களாக இத்துறைமுகத்தில் சீனி இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது